

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 24-05-2023


# பயணம் சிறக்கட்டும்!



தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மையமாக வைத்து பத்து நாள் பயணமாக சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பயணமாகி உள்ளார்கள்.

**திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்ததற்குப் பின்னால் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் தொழில் துறையில் மாபெரும் புரட்சியே நடந்துள்ளது. சென்னை, கோவை, தூத்துக்குடி, துபாய் ஆகிய இடங்களில் தொழில் துறை மாநாடுகளை தமிழ்நாடு அரசு நடத்தி இருக்கிறது. இதன் மூலம் 2021 முதல் இதுவரை 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு உள்ளன. 2 லட்சத்து 95 ஆயிரத்து 339கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் இதுவரை ஈர்க்கப் பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் அனைத்தும் செயல் பாட்டுக்கு வரும் போது 4 லட்சத்து 12 ஆயிரத்து 565 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். தமிழ்நாட்டில் நல்லாட்சி நடைபெறுகிறது என்பதற்கு இது மாபெரும் எடுத்துக்காட்டு ஆகும்.**

தமிழகத்தில் புதிய தொழில்கள் ஏராளமாக இந்த இரண்டு ஆண்டு காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் எல்லையைத் தாண்டி பல்வேறு மாநிலத்தில் இருந்தும் வந்து நிறுவனங்களைத் தொடங்குகிறார்கள்.பல்வேறு நாடுகளில் இருந்தும் தொழில் தொடங்க வருகிறார்கள். அந்த வகையில் தொழில் அதிபர்களை - நிறுவனங்களை ஈர்க்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. இதற்கு மிக முக்கியமான காரணம் தமிழ்நாட்டில் அமைந்துள்ள அரசும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீது உள்ள பெருத்த நம்பிக்கையுமே!

அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்டத்து வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி என்பதை உள்ளடக்கிய 'திராவிட மாடல்' என்பதை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இலக்காக அறிவித்தார்கள். 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற உன்னதமான கொள்கையை உள்ளடக்கியதே இந்த இலக்கு ஆகும்.

**"தொழில் வளர்ச்சி என்பதை ஏற்றுமதி இறக்குமதியாக அல்லாமல் நாட்டின் வளர்ச்சியாக, நாட்டு மக்களின் வளர்ச்சியாக, சமூகத்தின் வளர்ச்சியாகக் கணிக்க வேண்டும். எவ்வளவு வரிக் கட்டுகிறோம் என்பதல்ல வளர்ச்சி எத்தனை ஆயிரம் பேருக்கு வேலை கொடுத்துள்ளோம் என்பதும் சேர்ந்தது தான் வளர்ச்சியாகும்" என்பதை முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். அதே போல் தொழில்கள் அனைத்தும் ஒரே இடத்தில் குவிந்து விடக் கூடாது. அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக தொழில்கள் தொடங்கப்பட வேண்டும் என்பதையும் சொல்லி வருகிறார்கள். 'அனைத்து மாவட்டங்களின் வளர்ச்சி' என்பதும் அவரது இலக்கு ஆகும். அதன்படியே இரண்டு ஆண்டுகளாக தொழில் துறையும் செயல்பட்டு வருகிறது.**

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைத்திடுவதில் முக்கிய பங்காற்றிடும் விதமாக, 2030-2031 நிதியாண்டிற்குள், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மேம்படச் செய்வதை ஒரு இலட்சிய இலக்காகக் கொள்ள வேண்டும் என்பதையும் முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இது சாதாரணமாக எட்டி விடக் கூடிய இலக்கு அல்ல என்பதை அனைவரும் அறிவார்கள். இப்படி இலக்கு வைக்க வேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. முதலமைச்சர் அவர்கள் தனக்குத் தானே இலக்கு வைத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். இந்த இலக்கை அடைய வேண்டுமானால் ரூ.23 லட்சம் கோடி அளவுக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டாக வேண்டும். இந்தளவு மதிப்பிலான தொழில்கள் தொடங்கப்பட்டாக வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொழில்துறை அடைந்த மேம்பாடுகள் அனைவரும் அறிந்ததே. தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் என்று சொல்லப்படுகிற சிப்காட் நிறுவனத்தை 1974 ஆம் ஆண்டு உருவாக்கியவரே முதல்வர் கலைஞர்தான். ஒரே இடத்தில் பல்வேறு தொழில் நிறுவனங்களை நடத்துவதும், அவர்களுக்கு சலுகைகள் தருவதும் வேலை வாய்ப்பை உருவாக்குவதும், ஏற்றுமதியை அதிகப்படுத்துவதும் என்ற தொழில் கொள்கையை முதல்வர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்கள். இதன் மூலம் 1974ஆம் ஆண்டு ஒசூரில் மாபெரும் தொழில்பேட்டையை முதல்வர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்கள். 1989ஆம் ஆண்டு ராணிப்பேட்டையிலும் ஒசூரில் இரண்டாம் பிரிவுமாக இரண்டு தொழில்பேட்டையை உருவாக்கினார்கள். 1996 ஆம் ஆண்டு முதல்வர் கலைஞர் அவர்கள் திருப்பெரும்புதூர், இருங்காட்டுக் கோட்டை, கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் தொழில் வளாகங்களை அமைத்தார்கள். தொழில் துறையில் மிக முக்கியமான முன்னெடுப்புகளாக அமைந்து அவை தொழில் துறையை மேம்படுத்தியது. அதே வழித்தடத்தில்தான் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள்.

தமிழ்நாட்டிற்கு புதிய முதலீடுகளை ஈர்க்கும் வகையில், தமிழ் நாடு நிதி நுட்பக் கொள்கை, தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டு கொள்கை, தமிழ்நாடு உயிர் அறிவியல் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு காலணி மற்றும் தோல்பொருட்கள் கொள்கை, தமிழ்நாடு விண்வெளி & பாதுகாப்புத் தொழில் கொள்கை. தமிழ்நாடு எத்தனால் கலவைக் கொள்கை, மற்றும் தொழில் நுட்ப ஜவுளிகள் மற்றும் ஆடைகள் உற்பத்தியை ஊக்குவிக்கும் சிறப்புத்திட்டம் போன்ற பல்வேறு துறை சார்ந்த கொள்கைகளை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள். இவை அனைத்தும் தொழில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் விதத்தில் அமைந்துள்ளது.

**சிங்கப்பூரில் முன்னணி தொழில் நிறுவனங்களின் அதிபர்களை முதலமைச்சர் அவர்கள் சந்திக்கிறார்கள். ஜப்பானில் 200க்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் கலந்து கொள்ளும் முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் பங்கெடுக்கிறார்கள். இரண்டு நாடுகளிலும் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக இருக்கின்றன. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடைபெறும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள இவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.**

**ஒன்றிய அரசு வெளியிட்ட புள்ளிவிபரங்களின் படி தொழில் நிறுவனங்களை ஈர்க்கும் மாநிலங்களின் பட்டியலில் 14 ஆவது இடத்தில் இருந்து மூன்றாவது இடத்துக்கு முன்னேறி வந்துள்ளது தமிழ்நாடு. முதலிடத்தை அடைவோம் என்ற நம்பிக்கை அளிப்பதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பயணம் அமைந்துள்ளது. பயணம் சிறக்கட்டும். தமிழ்நாடு செழிக்கட்டும்.**



அரசு முறை பயணமாக சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்குச் செல்வதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.05.2023) சென்னை விமான நிலையத்தில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரிய தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் வழியனுப்பி வைத்தனர்.

### பா.ஜ.க.வுக்கு மீண்டும் வாக்களித்தால்

## அடுத்து வாக்களிக்கும் வாய்ப்பே மக்களுக்கு கிடைக்காது!

### ஜம்மு – காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக் பேச்சு!



*புதுடெல்லி, மே 24 -*

*பா.ஜ.க.வுக்கு வாக்களித்தால், அடுத்து வாக்களிக்கும் வாய்ப்பையே மக்களுக்கு அவர்கள் தரமாட்டார்கள் என்று, ஜம்மு - காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக் கூறியுள்ளார்.*

*"2019 மக்களவைத் தேர்தல், நமது ராணுவ வீரர்களின் உடல்கள் மீது நடத்தப்பட்டது", என்றும், "இதன்மீது விசாரணை நடத்தப்பட்டிருந்தால், அப்போது உள்துறை அமைச்சராக இருந்த ராஜ்நாத் சிங் மற்றும் அதிகாரிகள் பலர் சிறை சென்றிருப்பார்கள்" என்றும் அவர் மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.*

*பீகார், ஜம்மு-காஷ்மீர், கோவா, மேகாலயா மாநிலங்களின் ஆளுநராக இருந்தவர் சத்யபால் மாலிக். பா.ஜ.க.காரரான இவர், டெல்லியில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் மோடி அரசை கடுமையாக விமர்சித்து வருகிறார். அந்த வகையில் தான், 2019இல் பிரதமர் மோடி 2ஆவது முறையாக ஆட்சியைப் பிடிப்பதற்குக் காரணமாக புல்வாமா தாக்குதல் குறித்து ஆழமான பல குற்றச்சாட்டுக்களை, கடந்த மாதம் முன்வைத்தார்.*

*இந்நிலையில், ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஆல்வார் மாவட்டத்தில், ஞாயிறன்று நடைபெற்ற விழா ஒன்றில், பேசியிருக்கும் சத்யபால் மாலிக், புல்வாமா தாக்குதல் குறித்து மீண்டும் அதே குற்றச்சாட்டைக் கிளப்பியுள்ளார். "தேர்தல்கள் (2019ம் ஆண்டு மக்களவைத் தேர்தல்) நமது ராணுவ வீரர்களின் உடல்கள் மீது நடத்தப்பட்டன. அது குறித்து எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை. அப்படி நடத்தியிருந்தால் அப்போது உள்துறை அமைச்சராக இருந்தவர் (ராஜ்நாத் சிங்) பதவி விலகியிருக்க வேண்டியிருக்கும். பல அதிகாரிகள் சிறை சென்றிருக்க வேண்டும். பெரிய சர்ச்சையே உருவாகியிருக்கும்.*

*புல்வாமா தாக்குதல் 2019ம் ஆண்டு பிப்ரவரி 14 அன்று நடந்தது. அப்போது பிரதமர் மோடி, ஜிம் கார் பெட் தேசிய பூங்காவில் ஒரு படப்பிடிப்பில் இருந்தார். அவர் அங்கிருந்து வெளியே வந்ததும் அவரிடமிருந்து எனக்கு ஓர் அழைப்பு வந்தது. நான் அவரிடம் நாம் செய்த தவறினால், நமது ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று கூறினேன். அதற்கு அவர் என்னை அமைதியாக இருக்கும் படிக் கூறினார்" என மீண்டும் தனது குற்றச்சாட்டை உறுதிப்படுத்தியுள்ளார்.*

*அதானியின் பங்குச் சந்தை மோசடி குறித்தும் சத்யபால் மாலிக் பேசியுள்ளார். "வெறும் மூன்றே ஆண்டுகளில் அதானி அதிக அளவு சொத்துகளைச் சேர்த்துள்ளார். உங்களால் (மக்களால்) அவ்வாறு சேர்க்க முடிந்திருக்கிறதா? காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் அதானிக்கு கிடைத்த ரூ. 20 ஆயிரம் கோடி எங்கிருந்து வந்தது என்று கேள்வி எழுப்பினார். அதற்குப் பிரதமர் பதில் அளிக்கவே இல்லை. இரண்டு நாட்கள் அவர் நாடாளுமன்றத்தில் பேசினார். ஆனால், அந்தக் கேள்விக்கு மட்டும் பதில் அளிக்கவில்லை. ஏனென்றால் அவரிடம் பதில் இல்லை.*

*நான் கோவாவின் ஆளுநராக இருந்தபோது அம்மாநில முதல்வரின் ஊழல்கள் குறித்து பிரதமரிடம் புகார் தெரிவித்தேன். அதன் விளைவாக ஆளுநர் பதவியில் இருந்து நீக்கப்பட்டேன். முதல்வரோ அதே பதவியில் நீடித்தார். அதனால்தான் அவர்கள் ஊழலில் ஈடுபடுகிறார்கள், அதில் அவர்களுக்கு ஒரு பங்கு கிடைக்கிறது, மீதமுள்ள பணம் அதானிக்குச் செல்கிறது என்று நான் நம்புகிறேன்.*

*எனவே, அவர்களுக்கு (பா.ஜ.க.வுக்கு) நீங்கள் மீண்டும் வாக்களித்தால், அதற்கு பின்னர் உங்களால் எப்போதும் வாக்களிக்கவே முடியாது. அவர்கள் உங்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பைத் தரமாட்டார்கள். எப்போதும் நாங்கள் தானே வெற்றி பெறுகிறோம், பிறகு எதற்கு தேர்தலுக்காக செலவு செய்ய வேண்டும் எனக் கேட்பார்கள். என் மீதான வழக்கு விசாரணைகளை கண்டு எல்லாம் நான் அஞ்சப் போவது இல்லை. உண்மையைத்தான் பேசுவேன்" என்று சத்யபால் மாலிக் தெரிவித்துள்ளார்.*

### மூலனூர் ஒன்றியம் - கோட்டை மூலனூர் - கொளத்துப்பாளையம் பேரூராட்சி-தாராபுரம் நகராட்சி பகுதிகளில்

## ரூ.7.42 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகள்!

### அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தனர்!

*திருப்பூர், மே 24 -*

*மூலனூர் ஒன்றியம், கோட்டை மூலனூர், கொளத்துப்பாளையம் பேரூராட்சி, தாராபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.7.42 கோடி மதிப்பீட்டில் கால்நடை மருந்தகம் மற்றும் புதிய நியாயவிலைக்கடைகளை திறந்து வைத்தும், புதிய தார் சாலை அமைக்கும் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர்.*

*திருப்பூர் மாவட்டம், மூலனூர் ஒன்றியம், மூலனூரில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் ரூ.48.35 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை கிளை மருந்தகத்தை திறந்து வைத்தும், கோட்டை மூலனூரில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.2.57 கோடி மதிப்பீட்டில் கோட்டை மூலனூர் முதல் அக்கரைப்பாளையம் சாலை வரை தார் சாலை அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தும், தாராபுரம் ஒன்றியம், கொளத்துப் பாளையம் பேரூராட்சி முத்துக்கவுண்டன் வலசில் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடையை திறந்து வைத்தும், முத்து கவுண்டன்வலசு முதல் கரூர் மெயின் ரோடு வரை ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் புதிய தார்சாலை அமைக்கும் பணியையும், ஆலம்பாளையம் முதல் சாலரப்பட்டி வரை மற்றும் கரூர் சாலை முதல் மதுக்கம்பாளையம் வரை ரூ.81.22 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியையும், தாராபுரம் நகராட்சி சூளைமேடு பகுதியில் நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.93 கோடி மதிப்பீட்டில் சூளைமேடு முதல் சொக்கநாதம்பாளையம் வரை மற்றும் இதர சாலைகள் அமைக்கும் பணி என மொத்தம் ரூ.7.42 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர்.*

*இந்நிகழ்ச்சியில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் குமரேசன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், அவைத் தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன், துணைச் செயலாளர் பெ. பிரபாவதி, பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், ஒன்றிய கழகச் செயலாளர்கள் தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர், எஸ்.வி.எஸ். செந்தில்குமார், மூலனூர் துரை தமிழரசு உள்பட பலர் கலந்து கொண்டனர்.*




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023க்கான பனியனை (TSHIRT) நேற்று முன்தினம் (22.05.2023) அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் பொது மேலாளர் (நிர்வாகம்) வே. மணிகண்டன், அரசு அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.